அலுவலகக் கட்டிடத்திலும் இயங்கி வருவதை விட்டு இரண்டும் ஒரே இடத்தில் செயல்பட ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவர் அறையில் நிராகரிக்கப்பட்டது குறித்து

திரு. கரு. சீமைச்சாமி : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் விதி 42-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அது பற்றி நிதிநிலை அறிக்கையில் பேசிக்கொள்ளலாம் என்று தாங்கள் அதை நிராகரித்து விட்டீர்கள். நான் தங்கள் தீர்ப்பை ஆட்சேபிக்கவில்லை. ஆயினும், இன்றைக்கே வேறு இரண்டு தீர்மானங்களுக்குத் தாங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்கள். இது எந்த விதியின் அடிப்படையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. பேரவைத் தலைவர் அவர்கள் ஒருதலைப்பட்சமாக நடந்திருப்பதுபோலப் பேச முற்படுவது சரியல்ல. அறையில் கொடுத்த தீர்ப்பை அவையில் பேசக்கூடாது என்றும் விதிகள் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் உரிமைப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

மு.ப. 10–00 அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு . . .

(ஆ) மாநில சட்டசபைக் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்தியங்குவதுபற்றி

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் பத்திரிகைகளிலே படிக்கின்ற செய்தி நம்முடைய மாநிலத்திலே உள்ள சட்டசபைக் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்து அதிலே ஒன்று திரு. ஜகஜீவன்ராம் அவர்களுடைய தலைமையிலே இயங்கக்கூடிய காங்கிரஸ் கட்சி என்றும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நான் பின்னாலே அறிவிக்க இருக்கிறேன். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.